1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள். வினா எண். 14, திரு. ம. சின்னசாமி, மாண்புமிகு வருவாய் துறை அமைச்சர் அவர்கள்.

14— திருச்சி மாவட்டத்தைப் பிரித்தல்

*247. திரு. ம. சின்னசாமி :

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்— கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள மாவட்டங்களைப் பிரிக்கும் கருத்துரு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திருச்சி மாவட்டத்தை மூன்றாகப் பிரித்து அதில் ஒன்றுக்கு கரூரை தலைநகராக வைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) உள்ளது.

(ஆ) இல்லை.

திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மாவட்டங்களைப் பிரிக்கும் போது எந்த அளவுகோல் வைத்து பிரிக்கப்படுகின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, பெரிய மாவட்டங்களாக இருப்பதை நிர்வாக வசதிக்கு ஏற்றவாறு அவைகள் இரண்டாகப் பிரிக்கப்படுகிறது. அதன் அடிப்படையிலேதான் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சரானதற்குப் பிறகு தொடர்ந்து பல மாவட்டங்களைப் பிரிக்கவேண்டுமென்று உத்தரவு போட்டு அதன்படி எல்லா மாவட்டங்களும் பிரிக்கப்பட்டு, இன்னும் சில மாவட்டங்களை, திருச்சிராப்பள்ளி, தென்னாற்காடு, தஞ்சை போன்ற இந்த மூன்று மாவட்டங்களும் இன்னும் பிரிக்கப்படாமல் இருக்கின்றன. இன்றைக்கு புரட்சி தலைவி ஆட்சிக் காலத்தில் இது ஒன்றன்பின் ஒன்றாக வசதிக்கு ஏற்றவாறு பிரிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தைப் பொறுத்த வரையில், 10 வருவாய் வட்டங்கள், 18 சட்டமன்றத் தொகுதிகள்,

33 ஊராட்சி ஒன்றியங்கள், 6 நகராட்சிகள் இருக்கின்ற மிகப் பெரிய மாவட்டம். சிறிய மாவட்டங்கள்தான் சிறந்த நிர்வாகத்திற்கு உகந்தது என்று சொல்லி உத்தரப் பிரதேச மாநிலத்தில், மாவட்டங்கள் எல்லாம் மிகச் சிறியதாக ஆக்கி அங்கே சிறந்த நிர்வாகத்தை வைத்திருக்கிறார்கள். ஆகவே திருச்சிராப்பள்ளி மாவட்டத்தை மூன்றாகப் பிரித்து அதில் ஒன்றை, கரூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு மாவட்டத்தை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது இல்லையென்றாலும், கொள்கை அளவிலே அதை இப்போது அறிவிக்க அமைச்சரவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, அவ்வாறு பிரிக்கும்பொழுது, திருச்சியை தலைநகராகக் கொண்டு ஒரு மாவட்டமும், பெரம்பலூரைத் தலைநகராகக் கொண்ட திருவள்ளுவர் மாவட்டமும், அரசினுடைய ஆய்வில் உள்ளது. அது தான் புரட்சித்தலைவர் அவர்கள் போட்ட உத்தரவு. அதற்கு மேல் கொள்கை அளவை நான் இப்போது கேள்வி நேரத்தில் தெரிவிக்க முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அ. தேவராஜ்

திரு. அ. தேவராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதேபோன்று வடஆற்காடு மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்ட போது திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் என்று பிரிக்கப்பட்டுள்ளது. இன்னும் அதற்கான ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்குரிய கட்டடங்கள், இரண்டு ஆண்டுக்காலமாக கட்டப்படாமல் உள்ளது. பிரிக்கும்போதே அதற்குரிய ஏற்பாடுகள் செய்தால் செளகரியமாக இருக்கும். அப்படி ஏதாவது ஏற்பாடு செய்யப்படுகின்ற எண்ணம் உண்டா? புரட்சித் தலைவர் நிர்மாணித்த இடத்தையே தேர்வு செய்யப்பட எண்ணம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் மாவட்டங்களையும் சரி, வட்டங்களையும் சரி, பிரிக்கும் பொழுது, 'காம்ப்ரஹென்சிவ்' ஒருங்கிணைத்து ஒரே அரசு உத்தரவில் போடப்பட்டிருக்கிறது. அப்படித்தான் போடப்பட்டிருக்கிறது. கட்டுவதற்குரிய நிதி ஒதுக்கப்பட்டு, விரைவில் கட்டடம் கட்டுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. க. பழனிசாமி

திரு. க. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இன்னும் எத்தனை மாவட்டங்கள் இரண்டாகப் பிரிக்கப்படும் என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே சொல்லியிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம் என்று பிரித்ததற்குப் பிறகு இன்னும் கல்வி மாவட்டங்கள் கூட பிரிக்கப்படாமல், அதற்குரிய முதன்மைக் கல்வி அலுவலகம்........(குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருச்சி மாவட்டத்தைப் பிரிப்பதுபற்றியது மூலக் கேள்வி. பொதுவாக மாவட்டங்களைப் பிரிக்கின்ற அளவிற்கு நீங்கள் கேள்வி கேட்டால் அமைச்சர் பதில் தருவார். ஆனால் கல்வி மாவட்டத்தைப் பிரிப்பது என்பது கல்வி அமைச்சருக்கு வரக்கூடிய கேள்வி. இதை ஒட்டிய கேள்வியாகக் கேட்கவேண்டும்.

முற்பகல் 9-35

திரு. சி. ஞானசேகரன் : மன்னிக்க வேண்டும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே புரட்சித் தலைவர் ஆட்சி காலத்தில் போடப்பட்ட உத்திரவுகள் எல்லாம் கூட அமல் படுத்தப்படாமல் இருக்கிறபோது, மாவட்டங்களைப் பிரிக்கக்கூடிய செயல்பாடுகள் இந்த ஐந்தாண்டிலாவது முடிக்கப்படுமா என்பதை அமைச்சரிடம் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் ஆட்சிக்காலத்தில் பிரிக்கப்பட்ட மாவட்டங்களில் எங்கே அது செயல்படுத்தப்படவில்லை என்பதை குறிப்பாகச் சொன்னால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. நா. சா. பழனிசாமி.

திரு. நா. சா. பழனிசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்திலே மதுரை மாவட்டத்தை

இரண்டாகப் பிரித்து திண்டுக்கல்லை தலைநகராகக் கொண்டு அமைக்கப்பட்டதற்கு அண்ணா மாவட்டம் என்று பெயரிட்டார்கள். அதற்கு பிறகு வந்த தி.மு.க. ஆட்சியில் அதை காயிதே மில்லத் மாவட்டம் என்று பெயர் மாற்றியது. மீண்டும் இப்போது புரட்சித் தலைவி ஆட்சி வந்திருக்கிற நேரத்திலே புரட்சித் தலைவர் வைத்த அண்ணா மாவட்டம் என்ற பெயரே வைக்கப்பட்டிருக்கிறது. ஒரு ஆட்சி வருகிற போது ஒரு மாவட்டத்திற்கு பெயரை வைக்கின்ற போது. இன்னொரு ஆட்சி வருகின்ற போது அந்த மாவட்டத்திற்கு சில அரசியல் காரணங்களால் பெயரை மாற்றுகிறார்கள். அதற்கு ஏதாவது சட்ட விதிகளிலே மாற்றக்கூடாது என்று வழிமுறை இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித்தலைவருடைய வழி வந்த இந்த அரசு புரட்சித் தலைவர் அவர்கள் எதைச் செய்தார்களோ அதை அப்படியே செய்து வருகிறோம். ஆனால் அவர்கள் கேள்விப் போடுகிறபோது சில 'அரசியல் காரணங்களால்' என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படிப் பட்ட அரசியல் காரணங்களால் மாற்றுவதற்கு நமது அரசியல் சட்டத்திலோ அல்லது வேறு ஏதாவது சட்டமோ போடுவதற்கு இயலாது என்றுதான் நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. என். ஆர். சிவபதி.

திரு. என். ஆர். சிவபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கலாம் என்று சொன்னார்கள். பெரம்பலூர் நகரை தலைநகரமாகக் கொண்டு செயல்படும் என்று சொன்னார்கள். இது ஏற்கெனவே மாண்புமிகு புரட்சித் தலைவர் காலத்திலே பிரிக்கப்பட்டு செயல்படாமல் இருக்கிறது. அது எந்தக் காலக் கட்டத்தில் செயல்படும் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு நிதி ஆண்டில் நிச்சயமாக இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்த நிதியாண்டில் அதை பிரிப்பதற்கு உரிய முயற்சிகளை செய்வோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்க வந்த கேள்வி

மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் கேட்ட கேள்வியோடு தொடர்புடையதாகும். இந்தப் பெயர்களை மாற்ற முடியாமல் செய்வதற்கு அதற்கான சட்டமோ வேறு எதுவோ இயற்ற முடியாது என்று சொன்னார்கள். ஆனால் இப்படி ஒவ்வொரு முறையும் மாற்றம் செய்யும் போது அரசுக்கு பெரும் செலவு ஏற்படுகிறதே. அதை மனதிலே கொண்டு இனிமேல் பிரிக்கப்படுகிற மாவட்டங்களுக்காவது தனிப்பட்ட நபர்களுடைய பெயரை வைக்காமல் அது எந்த ஊரை தலைநகரமாகக் கொண்டு இருக்கிறதோ அந்த ஊரை வைத்தே அந்த மாவட்டத்திற்கு பெயரை சொல்லி அழைத்தால் பின்னால் மாவட்டத்தை பிரிப்பதற்கு வழி இல்லாமல் இருக்குமே. ஆகவே அதைப்பற்றி அரசு பரிசீலனை செய்யுமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன மாதிரி பெயர் மாற்றங்களிலே அரசுக்கு எந்தவித மான அதிகமான செலவும் இல்லை. ஆனால் இன்றைக்கு தனிப்பட்டவர்களுடைய பெயர்களை எங்கேயும் வைக்கவில்லை என்பதையும் இந்த நாட்டிற்காக தியாகம் செய்த பெரியவர்களுடைய பெயர்கள் தான் வைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. காஞ்சி பன்னீர்செல்வம்.

திரு. காஞ்சி பன்னீர் செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரிய மாவட்டங்களாக இருக்கிற மாவட்டங்களை பிரிக்கின்ற சூழ்நிலை வரும் என்று சொன்ன அந்த நிலையில் செங்கற்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் 17 தொகுதிகள் உள்ளடக்கி உள்ளன. ஆகவே அந்த மாவட்டத்தை பிரிக்கிற எண்ணம் அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.